**செய்தி வெளியீடு எண்: 802** **நாள்: 26.11.2017**

## <u>செய்தி வெளியீடு</u>

**மாண்புமிகு தமிழக முதல்வர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி, அவர்களின் உத்தரவின் பேரில், சிங்கப்பூரில் (25.11.2017) ஆவின் பால் விற்பனையை மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்கள் துவக்கி வைத்தார்.**

----------

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி, அவர்களின் உத்தரவின் பேரில், சிங்கப்பூரில் (25.11.2017) ஆவின் பால் விற்பனையை மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்கள் துவக்கி வைத்தார்.

தமிழகத்தில் பால் கொள்முதல் மற்றும் விற்பனையில், ஆவின் நிறுவனம் முதலிடத்தில் உள்ளது. சந்தையில் நிலவும் போட்டிகளுக்கு சவால் விடும் வகையில், விதவிதமான பால் பொருட்களையும் அறிமுகம் செய்து வருகிறது. அவை மக்களுக்கு எளிதாக கிடைக்கும் வகையில், விற்பனை நடைமுறைகளிலும் மாற்றம் செய்துள்ளது. தமிழகம் முழுவதும் கோலோச்சிய ஆவின், கடல் கடந்தும் தன் விற்பனையை விரிவாக்கம் செய்துள்ளது. தெற்காசிய நாடுகளிலும் ஆவின் பால் விற்பனையை தொடங்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்களின் உத்தரவின் பேரில், சிங்கப்பூரில் ஆவின் பால் விற்பனையை, மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்கள் துவக்கி வைத்தார். சிங்கப்பூர் பார்க் ராயல் ஓட்டலில் ஆவின் பால் விற்பனையை தொடக்கி வைத்து, மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்கள் பேசும்போது,

‘‘எந்த நாட்டிற்குச் சென்றாலும் நம்முடைய தமிழகர்கள் வாழ்ந்து வருகின்றனர். தமிழர்களே இல்லாத நாடு கிடையாது என்ற வகையில் தமிழர்களின் வளர்ச்சி உள்ளது. தமிழர்களின் பண்பாடு அனைத்து நாட்டு மக்களும் அரவணைத்துக்கொள்ளும் வகையில் உள்ளது. விட்டுக்கொடுக்கும் திறன், உழைப்பு, இருக்கின்ற நாடுகளுக்கு விசுவாசமாக இருப்பது போன்ற குணங்களால்

நம்மை அனைத்து நாட்டு மக்களும் விரும்புகின்றனர், வாழுகின்ற நாட்டின் முன்னேற்றத்திற்காக விசுவாசத்துடன் தமிழர்கள் பாடுபட்டு வருகின்றனர். திராவிடர்கள் விசுவாசத்திற்கு எடுத்துக்காட்டாக வாழக்கூடியவர்கள். நாட்டின் கலாச்சாரம், பண்பாடு, விசுவாசத்தை மற்ற நாட்டினர் விரும்புகின்றனர். சிங்கப்பூரில் பத்து லட்சத்திற்கு அதிகமாக தமிழர்கள் வாழ்கின்றனர். இந்தியாவில் பிரதமர் மோடி அவர்கள் தலைமையில் வலுவான அரசு செயல்பட்டு வருகின்றது. அதேபோன்று தமிழகத்தில் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழக முதல்வர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்கள் சிறப்பான நல்லாட்சியை கொடுத்து வருகின்றார். நாட்டிற்குத் தேவையான நல்ல திட்டங்களை தமிழக முதல்வர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்கள் செயல்படுத்தி வருகின்றார். தெற்காசிய நாடுகளில் ஆவின் பால் விற்பனை செய்யவேண்டும் என்றும், இந்திய வாழ்மக்கள் ஆவின் பால் பருகவேண்டும் என்றும் தமிழக முதல்வர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்கள் எங்களிடம் கூறினார். அதனைத் தொடர்ந்துதான் தற்போது சிங்கப்பூரில் ஆவின் விற்பனையைத் துவக்கியுள்ளோம். ஆவின் பாலுக்கு சிங்கப்பூர் மக்கள் ஆதரவு கொடுக்கவேண்டும். மலேசியா, துபாய், கொழும்பு போன்ற பல்வேறு நாடுகளில் ஆவின் பாலை விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றோம். ஆவின் பால் உலகத்தை சுற்றி வரும் வகையில் வெளிநாட்டு மக்கள் ஆதவு கொடுக்க வேண்டும். பிறக்கின்ற பொழுதே உதிரத்தை கொடுக்கின்ற பால் தாய்ப்பால். அதற்கு பின்பு நாம் அறிந்த வகையில் மனிதனுக்கு உதிரத்தை கொடுக்கின்ற பால் ஆவின் பசும்பால் மட்டுமே. எந்தவித கலப்படம் இல்லாத வகையில் ஆவின் பால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இன்றைக்கு தமிழகத்தில் 33 லட்சம் லிட்டர் பால் ஆவின் நிறுவனம் கொள்முதல் செய்து வருகின்றது. சுமார் 22 லட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்படுகின்றது. மீதி இருக்கின்ற பால், பால் பவுடராக வெளிமாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. ஆவின் பாலை பொருத்தமட்டில் மிகை மாநிலமாக தமிழகம் இருக்கின்றது. அருகில் உள்ள கேரளா மாநிலத்திற்கு தினமும் ஒரு லட்சம் லிட்டர் ஆவின் பால் விற்பனை செய்யப்படுகின்றது. மற்ற மாநிலங்கள் பாராட்டும் வகையில் ஆவின் பால் தரம் உள்ளது. இதனால் தான் மற்ற மாநில மக்கள் ஆவின் பாலை விரும்பி வாங்கி பருகி

வருகின்றனர். குறிப்பாக தென்மாநில மக்கள் ஆவின் பாலை அதிகமாக பயன்படுத்துகின்றனர். இன்றைக்கு ஆவின் பால் ஆண்டிற்கு 5 ஆயிரத்து நூறு கோடி ரூபாய் விற்பனையை எட்டியுள்ளது. ஆவின் பால் தலைசிறந்த பாலாக மற்ற நிறுவனங்கள் போற்றும் வகையில் உள்ளது. ஆவின் பாலை பொருத்தமட்டில் நாங்கள் சொல்வதை விட நீங்கள் வாங்கிப் பார்த்தால் அதன் சுவை, தரம் அனைத்தும் உங்களுக்கு விளங்கும். தென் மாநிலங்களில் தான் பசும் பால் அதிக அளவு கிடைக்கின்றது. காரணம் இயற்கை வளமும், சத்தான தீவனங்களால் சுவையான பால்களை பெறமுடிகின்றது. இன்றைக்கு தாய்ப்பாலுக்கு நிகரான பாலாக ஆவின் பால் திகழ்கின்றது. அனைத்து மாதிரி டெஸ்ட்களிலும் தரமான பாலாக ஆவின் பால் உள்ளது. தேவையான அளவு கொழுப்புச் சத்து, தேவையான அளவு புரோட்டீன் சத்து, தேவையான அளவு இனிப்புச் சத்து ஆவின் பாலில் உள்ளது. ஆவின் பாலின் வளர்ச்சி இன்றைக்கு சிங்கப்பூரில் அறிமுகப்படுத்தும் அளவுக்கு வளர்ந்துள்ளது. தெற்காசிய நாடுகளில் ஆவின் பாலை கொண்டு செல்ல வேண்டும் என்ற அடிப்படையில் தற்போது சிங்கப்பூரில் ஆவின் விற்பனையை தொடங்கியுள்ளோம். ஆவின் நிறுவனத்திற்கு சிங்கப்பூர் மக்கள் அனைவரும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று பேசினார்''.

இந்நிகழ்ச்சியில், கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத்துறை அரசு முதன்மை செயலாளர் டாக்டர் கே.கோபால், இ.ஆ.ப., ஆவின் நிர்வாக இயக்குநர் திரு.சி.காமராஜ், இ.ஆ.ப., தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத் தலைவர் திரு. அ.மில்லர், சேலம் ஆவின் தலைவர் திரு.ஆர்.சின்னச்சாமி, சிங்கப்பூர் விமல்ஜோதி ஏற்றுமதி நிறுவனத்தலைவர் திரு.டி.என்.குமார், ஆவின் உயர் அலுவலர்கள் மற்றும் சிங்கப்பூர் தொழில் அதிபர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**